1973 நவம்பர் 23]

'ஆக்குபை' செய்ய வேண்டும், இல்லாவிட்டால் பணத்தைப் பிடிப்போம் என்று ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுவதை நிறுத்துவதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்காக வீடு என்று ஒரு குறிப்பிட்ட முறையிலே வீடுகள் கட்டி வைத்திருக்கின்ற காரணத்தாலே, வசதிகள் அதிகம் வேண்டும் என்பதற்காக பெரிய வீடுகள் தேவை என்றால், அதை அவர்கள்தான் கொடுக்க வேண்டுமே தவிர, அந்த விதியை மாற்றிக்கொள்ள முடியாது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நகரத்திலே இருப்பவர்களுக்கும் 10 சதவிகிதம், கிராமத்திலே இருப்பவர்களுக்கும் 10 சதவிகிதம் வாடகை என்பது சரிதானா? கிராமப் பொருளாதாரமும், நகரப் பொருளாதாரமும் ஒரே மாதிரியாக இருக்கிறதா என்பதை அரசு பரிசீலிக்க முடியுமா? கிராமத்திலே குறைந்த வாடகைக்கு நல்ல வீடுகள் கிடைக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, கிராமத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கும், நகரத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதாசாரம் ஒன்றுதான். நகரத்தில் வேண்டுமானால் நகர ஈட்டுப்படி கொடுக்கப்பட்டிருக்கலாம். சம்பளம் ஒரே விகிதாசாரத்திலே இருக்கிறது. அதனாலே உயர்வு தாழ்வு கற்பிப்பது சரியல்ல.

Aid from the Government of India for the Development of Panchayat Union Blocks

* 85. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that aid from the Government of India for the development of Panchayat Union Blocks is to be stopped;

(b) if so, from when and the reason therefor; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

[1973 நவம்பர் 23

ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களின் வளர்ச்சிக்கான மத்திய அரசு நிதி உதவி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு நிதி உதவி நிறுத்தப்படவிருக்கிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், எத்தேதி முதல் அந்த உதவி நிறுத்தப்படவிருக்கிறது? அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) முதல் (உ) வரை. சமுதாய வளர்ச்சித் திட்டம் நிலை I நிலை II ஆகிய இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலை வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 12.00 லட்சம் மத்திய நிதி உதவி பெறத் தகுதியுள்ளதாகும். ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்னர், நிலை 1 வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும் மேற்கொண்டு ஐந்து ஆண்டுகள் கால அளவிற்கு ரூ. 5 லட்சம் நிதி உதவியுடன் நிலை II வளர்ச்சி வட்டாரமாக ஆகின்றன. பத்து ஆண்டுகள் முடிவடைந்த பின்னர், வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும் நிலை II க்குப் பிந்திய வளர்ச்சி வட்டாரமாகக் கருதப்படுகின்றன. 1974-75-ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்தும் நிலை II க்குப் பிந்திய வளர்ச்சி வட்டாரங்களாக ஆகிவிடுவதால், சமுதாய வளர்ச்சித் திட்ட முறையின்கீழ் இந்த மாநிலம் மத்திய அரசிடமிருந்து உதவி பெறுவதற்கு உரியதாக இல்லை. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மாநில அரசுத் திட்டங்களாகும். நான்காவது திட்டக் காலத்தில், மாநிலத் திட்டத்திற்கு ஒரு மொத்தக் கடன், ஒரு மொத்த மானியம் என்ற அடிப்படையில் மாநில அரசுத் திட்டங்களுக்காக மத்திய அரசு உதவி அளிக்கப்படுகிறது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களை மாற்றி அமைப்பதற்காக ஒரு கமிஷன் அமைத்து அதன் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டது. அதன் பிரகாரம் பரிசீலித்ததை அரசு அறிவித்ததா, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, பிரிப்பதற்காக அந்தக் குழு அமைக்கப்படவில்லை. பல்வேறு வேலைத் திட்டங்களைக் கவனித்துக் கொள்ள குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை இன்னும் வந்து சேரவில்லை. ஏற்கெனவே அறிவித்திருந்தபடி

1973 நவம்பர் 23]

375 ஊராட்சி ஒன்றியங்கள்தான் தமிழ் நாட்டிலே பிரிக்கப்பட வேண்டும் என்று விதி வகுத்த காரணத்தாலே, அந்த நேரத்திலே ஜனத்தொகை அடிப்படையைக் கொண்டும், வளர்ச்சிப் பரப்பளவைக் கொண்டும் ஒரு அளவு கணித்து தமிழ் நாட்டிற்கு 375 ஒதுக்கப்பட்டது. அந்த 375-ல் ஒன்று, கல்வராயன் மலை. அது தனியாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே 374 ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டோடு மத்திய அரசு நிதி உதவி முடிவடைந்து விடுகிறது. பல ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட 374-க்கு மேல் இருக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கத்தின் ஆணையின்கீழ் பிரிக்கப்படாமல் இருந்தது. அடுத்த ஆண்டு அதற்கு ஏற்படுகிற செலவு அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை இருக்கிற காரணத்தால், பிரிக்கப்பட வேண்டியவற்றைப் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இப்பொழுதே எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. வே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இன்று உள்ள நிலைமை என்னவென்றால், ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 9 பஞ்சாயத்துகள் இருக்கின்றன, இன்னும் சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு 50 முதல் 70 வரை பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அதனுடைய விஸ்தீரணமும் அதிகம். ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குப் போவதற்கு 30 மைல் ஆகும். புதுக்கோட்டையில் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 30 மைல் அகலம் இருக்கிறது. இம்மாதிரி பெரிய விஸ்தீரணம் உள்ள பஞ்சாயத்து யூனியன்களை இரண்டாகப் பிரிப்பதற்கும், கம்பம் பஞ்சாயத்து யூனியன் போன்ற சிறிய பஞ்சாயத்து யூனியனை விரிவாக ஆக்கி, பெரிய பஞ்சாயத்து யூனியன்களாக ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? மத்திய அரசின் கட்டுப்பாடு இந்த வருஷத்தோடு முடிவடைந்து விடுகிறது என்று எண்ணுகிறேன். அடுத்த வருஷத்திலேயிருந்து மாநில அரசாங்கமே நேரடியாகக் கவனிக்க வேண்டியிருப்பதால், மாநில அரசாங்கம் மாற்றியமைக்க முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். தமிழ் நாட்டில் இப்பொழுது 10-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு, 50, 60 ஊராட்சிகள் இருக்கின்றன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 65 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை ஊராட்சி ஒன்றியத்தில் 66 ஊராட்சி மன்றங்களும், பேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் 67 ஊராட்சி மன்றங்களும் இருக்கின்றன. இப்படி தமிழ் நாட்டில் 10 ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டிய நிலையிலே

இருக்கின்றன. அதைப் போலவே பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் 14 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. இந்த தாரதம்மிய வித்தியாசத்தைப் போக்க பல கோரிக்கைகள் வரப்பெற்றிருந்தும், இந்த ஆண்டோடு மத்திய அரசின் உதவி முடிகின்ற காரணத்தால், அந்த முழுப் பொறுப்பையும் தமிழ் நாடு அரசே ஏற்றுக்கொள்ள இருப்பதால், 1974-75-ல் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று இன்றைய தினம் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு உதவி நிறுத்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நிறுத்தப் படக் கூடாது என்ற பிரச்சினைபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுவிலே பேசினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த ஊராட்சி ஒன்றியங்கள் இப்பொழுதுதான் பிரிக்கப்படுகின்ற காரணத்தாலும், இந்த நிதி உதவியை மத்திய அரசு நிறுத்துகின்ற காரணத்தாலும், அதிகமாக நிதி உதவி இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அவர்களிடம் வைத்திருக்கிறோம். ஆகையினால் அதற்குப் பிறகு அதைப்பற்றி அறிவிப்பு செய்யலாம்.

Conference of Municipal Chairmen

* 86. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to convene a Conference of Municipal Chairmen to discuss the subject of giving more powers to Municipalities; and

(*b*) if so, when the Conference is proposed to be convened?

நகராட்சித் தலைவர்களின் கூட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சிகளுக்கு மேலும் அதிக அதிகாரங்களை அளிப்பது குறித்து விவாதிக்க நகராட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், அக்கூட்டத்தினை எப்போது கூட்டுவதாகத் திட்டமிடப் பட்டுள்ளது?